## தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் போட்டித் தேர்வுக்கான உண்டு – உறைவிடப் பயிற்சி:

# ‘நான் முதல்வன்’ திட்டத்தின் கீழ் குடிமைப்பணித் தேர்வுக்கான படிப்பகம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

சென்னை, செப்.26 -

**இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நான் முதல்வன் திட்டத்தின் கீழ் குடிமைப் பணி தேர்வுகளுக்கான படிப்பகத்தை திறந்து வைத்து, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் போட்டித் தேர்வுகளுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி, முன்னாள் படைவீரர் நலத்துறையினருக்கான முதல் கட்ட திறன் பயிற்சி ஆகியவற்றைத் தொடங்கி வைத்தார்.**

சென்னை, அண்ணா நூற்றாண்டு நினைவு நூலகத்தில், நேற்று முன்தினம் (24.09.2024), தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் நான் முதல்வன் கீழ் போட்டித் தேர்வுகளுக்கான உண்டு உறைவிடப் பயிற்சி மற்றும் குடிமைப்பணி தேர்வுகளுக்கான படிப்பகம் தொடக்கம், முன்னாள் படைவீரர் நலத் துறையினருக்கான முதல் கட்ட திறன் பயிற்சிகள் தொடக்கம் தமிழ்நாடு ஆட்டோ மொபைல் உயர்திறன் மேம்பாட்டு மையத்துடன் இணைந்து தொழிற்சாலை 4.0 தரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள மேம்படுத்தப்பட்ட பணிமனைகளில் 13க்கும் மேற்பட்ட குறுகியகால திறன் பயிற்சிகள் தொடக்கம் மற்றும் தமிழ்நாடு திறன் போட்டிகள், இந்திய திறன் போட்டிகள், நிரல் திருவிழா போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா, இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத்திட்ட செயலாக்க துறை அமைச்சர்உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

முதலமைச்சர் அவர்களின் கனவுத் திட்டமான ‘நான் முதல்வன் திட்டம்’ இளைஞர் நலன் மேம்பாட்டிற்கான முன்னோடி திட்டம் ஆகும். 2022- ஆம் ஆண்டு முதலமைச்சர் அவர்களின் பிறந்த நாளான மார்ச் 1-ஆம் தேதி துவங்கப்பட்டு இரண்டு ஆண்டுகளில் 28 லட்சத்திற்கும் மேற்பட்ட இளைஞர்களை பல்வேறு தொழில் சார்ந்த திறனாளர்களாக இத்திட்டம் உருவாக்கியுள்ளது.

பொருளாதாரத்தால் பின்தங்கிய மாணவர்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் பல்வேறு சலுகைகளை வழங்கி பள்ளி மாணவர்கள் தகுந்த உயர்கல்வியைத் தேர்ந்தெடுக்க ‘கல்லூரிக் கனவுத்திட்டம்’, கிராமப் புற மாணவர்களுக்கு முன்னணி நிறுவனங்களில் வேலை வாய்ப்புடன் திறன் பயிற்சி வழங்கும் ‘சிகரம் தொடு திட்டம்’, பள்ளிப் படிப்பை இடைநிறுத்தம் செய்யும் மாணவர்கள் உயர்கல்வி பயில ‘உயர்வுக்குப் படி திட்டம்’ போன்ற பல திட்டங்கள் மூலம் இளைஞர்கள் சிறந்த எதிர்காலத்தை பெறுவதற்கான புதிய பாதைகளை தந்துள்ளது நான் முதல்வன் திட்டம்.

### “நான் முதல்வன்” - போட்டித் தேர்வுகள் பிரிவு

இவற்றோடு அரசு பணி ஒன்றையே கனவாக கொண்டுள்ள ஆயிரம் ஆயிரம் இளைஞர்களின் கனவை மெய்ப்படுத்தவும் குறிப்பாக ஒன்றிய அரசு நடத்தும் U.P.S.C, SSC மற்றும் வங்கித் துறை, போன்ற அரசுப்பணிக்கான போட்டித் தேர்வுகளுக்கு சிறப்பான பயிற்சி அளிக்க “நான் முதல்வன்” - போட்டித் தேர்வுகள் எனும் தனிப்பிரிவு கடந்தாண்டு மார்ச் மாதம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது .

ஒன்றிய அரசு பணியாளர் தேர்வாணையம்; (UPSC) நடத்தும் குடிமைப் பணித் தேர்வில் தமிழ்நாட்டைச் சேர்ந்த இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் வகையில், தமிழ்நாடு வரவுசெலவுத் திட்டம் 2023—2024-இல் ஒரு சிறப்பு ஊக்கத்தொகை திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் 1,000 குடிமைப் பணித் தேர்வு விண்ணப்பதாரர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.

இவ்வாறு, தேர்வான 1000 மாணவர்களுக்கு அவர்களின் முதல்நிலைத் தேர்வுக்குத் தயாராவதற்கு 10 மாதங்களுக்கு மாதம் ரூ.7,500 ரூபாய் வழங்கப்படுகிறது. முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவர்களுக்கு ரூ.25,000 (ரூபாய் இருபத்தைந்தாயிரம்) வழங்கப்படுகிறது.

இந்தத் திட்டத்தின் மூலம், அகில இந்திய சிவில் சர்வீஸ் முதல் நிலை தேர்வு 2023 ல் தேர்ச்சி பெற்ற 453 மாணவ மாணவிகளுக்கு தலா ரூபாய் 25 ஆயிரம் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை செயல்படுத்துவதற்கு முந்தைய ஆண்டில் வெளியிடப்பட்ட குடிமைப் பணித் தேர்வு முடிவில் முதல் 100 இடங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒரு மாணவர் கூட இடம் பெறாத நிலை இருந்தது.

இந்த திட்டத்தை அறிமுகப்படுத்திய முதல் ஆண்டிலேயே குடிமைப் பணித் தேர்வு முடிவு 2023-2024 -ல், நான் முதல்வன் திட்டத்தின் மூலம் பயன் பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 6 மாணவர்கள் அகில இந்திய அளவில் முதல் 100 இடங்களில் இடம் பிடித்து சாதனை படைத்துள்ளனர். மேலும், குடிமைப் பணித் தேர்வில் தேர்ச்சி பெற்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த 47 மாணவர்களில் 39 மாணவர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தவர்கள் ஆவர்.

### நான் முதல்வன் யு.பி.எஸ்.சி. முதல்நிலைத் தேர்வு ஊக்கத்தொகை திட்டம் - 2024

UPSC முதல்நிலைத் தேர்வு - 2024க்கு தயாரான 1000 தமிழ்நாட்டு இளைஞர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்ந்தேடுக்கபட்டு, கடந்த ஆண்டு, அக்டோபர் மாதம் முதல் மாதா மாதம் ரூ.7,500 வழங்கப்பட்டது. அவர்களில், 276 பேர் யு.பி.எஸ்.சி முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். இத்திட்டத்தின் பயனைக் கருத்தில் கொண்டு, கடந்த ஆண்டைப் போலவே, இந்தாண்டும், 1000 தமிழ்நாட்டு இளைஞர்கள் மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, 2025-ஆம் ஆண்டு நடைபெற உள்ள, யு.பி.எஸ்.சி முதல்நிலை தேர்வுக்கு தயாராக ஏதுவாக, மாதா மாதம், 7,500 ரூபாய் வழங்கும் திட்டத்தின் துவக்கமாக, 13 மாணவர்களுக்கு தலா ரூபாய் 7,500/க்கான காசோலை வழங்கப்பட்டது.

### சென்னை அண்ணா நகர் பகுதியில் “நான் முதல்வன் யு.பி.எஸ்.சி Study hall”

குடிமைப் பணித் தேர்வுக்கு பயிற்சி பெறும் பெரும்பாலான மாணவர்கள் சென்னை அண்ணாநகர் பகுதியில் தங்கி பயிற்சி பெறுகின்றனர். போட்டித் தேர்வு பயிற்சி மையங்களில் பயிற்சி வகுப்பை முடித்தவர்கள், அறை வாடகை, உணவுக்காண செலவு தவிர, ‘Study hall’ பயன்படுத்துவதற்கு மாதா மாதம் ரூபாய், 2000 முதல் 3000 வரை செலவு செய்வதை கவனத்தில் கொண்டு சுமார் 4000 சதுர அடி பரப்பில் 200 மாணவர்கள் அமர்ந்து படிக்கும் வகையில் நான் முதல்வன் யு.பி.எஸ்.சி ‘Study hall’ சென்னை அண்ணா நகர் பகுதியில், துவக்கி வைக்கப்பட்டது..



**1,000 மாணவர்களுக்கு ‘‘நான் முதல்வன் SSC cum RAILWAYS மற்றும் வங்கிப் பணி’’ தேர்வுகளுக்கான கட்டணமில்லா உறைவிடப் பயிற்சி.**

குடிமைப்பணிகள் முதல்நிலைத் தேர்வு மற்றும் முதன்மைத் தேர்வுகளுக்கு வழங்கப்படும் ஊக்கத்தொகை திட்டங்களின் தொடர்ச்சியாக, மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையம் (SSC) இரயில்வே தேர்வு வாரியம் (RRB) மற்றும் வங்கிப் பணிக்கான தேர்வுகளில் (IBPS) தேர்ச்சி பெறும் தமிழ்நாடு இளைஞர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும் நோக்கத்துடன், ஆண்டு தோறும் 1,000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு, அவர்களுக்கு சென்னை, கோவை, மதுரை ஆகிய பகுதிகளில் ஆறு மாதங்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய போட்டித் தேர்வுகளுக்கான தரமான பயிற்சி அளிக்கப்படும். இதற்காக இந்த ஆண்டு தமிழ்நாடு பட்ஜெட் உரையில் ரூ.6 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி, “நான் முதல்வன் SSC cum RAILWAYS” தேர்வுகளுக்கான கட்டணமில்லா உறைவிடப் பயிற்சிக்கு, 300 மாணவர்களும் மற்றும் “நான் முதல்வன் வங்கிப் பணிகளுக்கான” தேர்வுகளுக்கான கட்டணமில்லா உறைவிடப் பயிற்சிக்கு 700 மாணவர்களும், மதிப்பீட்டுத் தேர்வு மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு, சென்னை, சேலம், விருதுநகர் மாவட்டங்களில் நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவின் வாயிலாக 6 மாத காலம் உறைவிடப் பயிற்சி வழங்கப்படும் திட்டத்தையும் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கி வைத்தார்.

**நிரல் திருவிழா போட்டிகளின் வெற்றியா ளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்:**

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம், இறுதியாண்டு பொறியியல் மாணவர்களுக்காக நான் முதல்வன் நிரல் திருவிழா திட்டத்தை சமூகத்தில் உள்ள நிகழ்நேர பிரச்சினைகளுக்கு நவீன தொழில்நுட்பம் மூலம் தீர்வு காணும் வகையில் தமிழக இளைஞர்களின் ஆர்வத்தை தூண்டும் பொருட்டு தொடங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாணவர்கள் தொழில்துறையில் உள்ள தொழில்நுட்ப நிர்வாக சவால்களுக்கு தீர்வு காணும் வகையில் அவர்கள் திறன்கள் மேம்படுத்தப்படும். மைக்ரோசாப்ட், கூகுள், ஆட்டோடெஸ்க் போன்ற பல்வேறு பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் இந்திய தொழில்நுட்ப நிறுவனம் போன்ற நிறுவனங்களுடன் இணைந்து பல திறன்சார் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

இந்த ஆண்டு, TNSDC 10 தலைப்புகளின் கீழ் 65 சவால்களில் 290 பொறியியல் நிறுவனங்களைச் சேர்ந்த 28,450 மாணவர்களைக் கொண்ட 8486 படைப்புகள் சமர்ப்பிப்புகளைப் பெற்றது. இந்த 290 நிறுவனங்களில் இருந்து 9032 பேராசிரியர்கள் மாணவர்களுக்கு வழிகாட்ட ஆசிரிய வழிகாட்டிகளாகப் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

கல்வி வல்லுநர்கள் மற்றும் தொழில் துறை நிபுணர்கள் அடங்கிய ஒரு நிபுணர் குழு, சமர்ப்பிப்புகளை மதிப்பீடு செய்து சிறந்த 1000 திட்டங்களை பட்டியலிட்டது. ஊக்கத் தொகையாக ரூ. 10,000 பட்டியலிடப்பட்ட குழுக்களுக்கு அவர்களின் திட்டத்தின் முன் மாதிரியை உருவாக்க வழங்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் 6 நகரங்களில் (சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி) 8 இடங்களில் 25 ஜூன் 2024 முதல் ஜூன் 28, 2024 வரை நடத்தப்பட்ட நிரல் திருவிழாவின் மாபெரும் இறுதி மதிப்பாய்வை TNSDC நடத்தியது.

சிறந்த 144 அணிகள், Startup TN உடன் இணைந்து ஒரு நிபுணர் குழுவால் அவற்றின் புத்தொழிலாக மாற வாய்ப்புள்ள அடிப்படையின் கீழ் மதிப்பிடப்பட்டன. அதில் முதல் 50 திட்டங்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ. 1 லட்சம் அமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டது. முதல் 33 அணிகள் அமைச்சர் பெருமக்கள் மற்றும் பிற விருந்தினர்களுக்கு தங்கள் திட்டங்களை காட்சிப் படுத்தினர்.

**தமிழ்நாடு திறன் போட்டிகள் மற்றும் இந்திய திறன் போட்டிகளில் வெற்றி-பெற்ற மாணவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குதல்**

இந்தியாவிலேயே, திறன்களின் தலைநகராக தமிழ்நாட்டை உருவாக்க தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் பல முன்னெடுப்பு களை எடுத்து வருகிறது. கலை, அறிவியல் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் வழங்கப்படும் திறன் பயிற்சிகள் மட்டுமல்லாமல் மாணவர்களின் தனித் திறன்களை கண்டறிந்து அவற்றை மேம்படுத்தி மெருகேற்றி உலக அரங்கில் அங்கீகாரம் பெறுவதற்கு ஏற்ற வகையில் வழிசெய்வதற்கு நம் தமிழ்நாடு முதலமைச்சர், அவர்களின் வழிகாட்டுதலின் படி மே 5, 2023 அன்று சென்னையில் தமிழ்நாடு திறன் போட்டிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துவக்கிவைத்தார்.

இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை நடத்தப்படும் உலகத் திறன் போட்டியில் நம் நாட்டைப் பெருமையுடன் பிரதிநிதித்துவப் படுத்தக்கூடிய தகுதியான நபர்களைத் கண்டறிய இந்த தமிழ்நாடு திறன் போட்டிகள் நடத்தப்பட்டது.

TN Skills 2023 திறன் போட்டிக்கு பெரும் எண்ணிக்கையில் பதிவு நடைபெற்றது. தமிழ்நாடு முழுவதிலும் 38 மாவட்டங்களில் இருந்து 53,995 பதிவுகள் பெரும் வரவேற்பை பெற்றன. மேலும் தேசிய திறன் மேம்பாட்டு கழக தரவுகளின்படி Level 1 போட்டிக்கான பதிவு புள்ளிவிவரங்களில் நமது மாநிலம் இந்தியாவிலேயே முதலிடம் பிடித்தது.

மூன்று கட்டமாக நடைபெற்ற திறன் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் 87 நபர்கள் தேசிய அளவில் நடைபெற்ற “இந்தியா ஸ்கில்ஸ்” போட்டியில் பங்கேற்றனர். புதுடில்லியில் நடைபெற்ற தேசிய அளவிலான இந்தியா ஸ்கில்ஸ் போட்டிகள் 2024 ல் தமிழக பங்கேற்பாளர்கள் மொத்தம் 40 பதக்கங்களை (தங்கம் 6, வெள்ளி 8, வெண்கலம் 9, சிறப்பு பதக்கம் 17) வென்று தமிழ்நாட்டிற்கு சிறப்பு சேர்த்தனர். கடந்த 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற இந்தியா திறன் போட்டிகளில் தமிழ்நாடு 10வது இடத்திலிருந்து 2024-ஆம் ஆண்டு தேசிய அளவில் 3வது இடத்தைப் பிடித்தது பாராட்டத்தக்க சாதனை மட்டுமன்றி தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு கிடைத்த மிகப்பெரிய தேசிய அங்கீகாரம்.

இந்த வெற்றியை அங்கீகரிக்கும் விதமாக இந்தியா ஸ்கில்ஸ் 2024-ல் தமிழ்நாடு சார்பாக பங்கேற்று தங்கப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.1,00,000, வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.50,000 வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.30,000, சிறப்பு பதக்கம் வென்றவர்களுக்கு ரூ.25,000 மற்றும் இதர பங்கேற்பாளர்களுக்கு ரூ.20,000 ரொக்கப் பரிசு இன்று வழங்கப்பட்டது.

**தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகம் வழங்கும் முன்னாள் படைவீரர் நலத் துறையினருக்கான முதல் கட்ட திறன் பயிற்சிகள் தொடக்கம்**


நாட்டுக்காக போராடிய முன்னாள் படை வீரர்கள் நலத்தினை கருத்தில் கொண்டு அவர்கள் திறன் பயிற்சியுடன் வேலை வாய்ப்பு பெறும் வகையில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு விவசாயப் பல்கலைக் கழகத்தின் கீழ் வரும் கிரிஷி விஞ்ஞான் கேந்திரா பயிற்சி நிலையங்கள், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழகத்தின் பயிற்சி நிலையங்கள் ஆகியவற்றுடன் இணைந்து தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் முதற்கட்டமாக 10 மாவட்டங்களில் துவங்கவுள்ள குறுகிய கால திறன் பயிற்சிகள் மற்றும்

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மற்றும் தமிழ்நாடு ஆட்டோ மொபைல் உயர்திறன் மேம்பாட்டு மையமும் இணைந்து தொழிற்சாலை 4.0 தரத்தில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களிலுள்ள மேம்படுத்தப்பட்ட பணிமனைகளில் 13க்கும் மேற்பட்ட குறுகியகால திறன் பயிற்சிகளை கட்டணமின்றி வழங்கவிருக்கிறது. டாடா நிறுவனத்தின் சான்றிதழுடன் வழங்கப்படும் உயர்தர திறன் பயிற்சியானது படித்து வேலைவாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பை வழங்கும். மேற்கண்ட திறன் பயிற்சிகளை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன், சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அரசு செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா, முன்னாள் படைவீரர் நலத் துறை இயக்குநர் பா.விஷ்ணுசந்திரன், நான் முதல்வன் திட்டத்தின் முதன்மைச் செயல் அலுவலர் ஜெயபிரகாசன், திட்ட இயக்குநர் சுதாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் பனப்பாக்கம் சிப்காட் தொழில் பேட்டையில் அமைய உள்ள டாடா மோட்டார்ஸ் நிறுவனத்தின் கட்டுமானப் பணிக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 28ந் தேதி அடிக்கல் நாட்டுவதையொட்டி விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து சிப்காட் பகுதியில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ஜெ.யு.சந்திரகலா, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் செல்வி. கிரண்ஸ்ருதி, தொழிலதிபர் ரமேஷ் , கழக சுற்றுச்சூழல் அணி மாநிலதுணை செயலாளர் ஆர். வினோத்காந்தி, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் ஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்.எல்.ஏ., நெமிலி ஒன்றியக் குழு தலைவர் வடிவேலு, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி, ஒன்றிய செயலாளர்கள் ரவீந்திரன், பெருமாள், பேரூர் கழக செயலாளர்கள் சீனிவாசன், ஜனார்த்தனன், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். வினோத்,மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் குலோத்துங்கன், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் சரவணகுமார், மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாஸ், துணை அமைப்பாளர் . சிவா,மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் முரளி, மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் பவானிவடிவேலு, ஒன்றிய பொருளாளர் பிரகாஷ் மற்றும் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



வேலூர் மாவட்டம் அணைக்கட்டு சட்டமன்றத் தொகுதி ஒடுக்கத்தூர் பேரூராட்சி பகுதியில் உள்ள அரசு ஆண்கள் – பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மாவட்டக் கழகச் செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, மாணவ – மாணவிகளுக்கு இலவச மிதிவண்டிகளை வழங்கினார். இதில் மாவட்ட ஊராட்சி குழு பெருந்தலைவர் மு.பாபு, ஒன்றியச் செயலாளர் பி.வெங்கடேசன், பேரூராட்சி செயலாளர் பெருமாள் ராஜா, துணைச் செயலாளர் மலர்விழி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் என்.பிரகாஷ், பள்ளி தலைமை ஆசிரியர், ஆசிரியர்கள் , ஒன்றியக் கழக நிர்வாகிகள், பேரூராட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.